1. திரு. க. அன்பழகன்

2. திரு. நா. இராமகிருஷ்ணன்

3. திரு. S.R. இராஜா

4. திரு. தா. உதயசூரியன்

5. திரு. துரை. சந்திரசேகரன்

5. தகவல் கோரல்

(அ) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு உரிய இருக்கையை முன்வரிசையில் ஒதுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் வந்தார்கள். ஏதோ ஒரு கருத்தை zero hour-ல் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். என்ன விஷயம் என்று சொல்லுங்கள் என்றேன். அதை அவர் என்னிடம் சொல்லவில்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன விஷயத்தைத்தான் இப்போது சொல்கிறேன். பெரிய விஷயம் ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், நமது செயலாளர் அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், ஏற்கெனவே இதற்கு முந்தைய காலகட்டத்தில், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், ஒன்று அறிவிப்பு கொடுப்பார்கள் அல்லது விஷயத்தையாவது வந்து சொல்வார்கள். அந்த முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை zero hour-ல் raise பண்ணியிருக்கிறார்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பில் இருக்கின்றன. அவற்றைப் பாருங்கள்.

2024 பிப்ரவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரை அந்த மரபு-நீங்கள் அந்தப் பழைய மரபைக் கடைபிடியுங்கள். நீங்கள் பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி சட்டமன்றத் துணைத் தலைவர் இருக்கை குறித்து, எங்களுடைய சட்டமன்றக் கொறடா மற்றும் மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் அறையிலே நான்கு முறை சந்தித்துக் கடிதம் கொடுத்திருக்கின்றார்கள். நம்முடைய அவையில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு அருகில், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை ஒதுக்குவது மரபாக இருந்து கொண்டிருக்கின்றது. பல ஆண்டு காலமாக இருந்து வருகின்ற மரபை நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்போடு தங்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, நாங்கள் பலமுறை தங்களிடத்திலே நேரில் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றோம். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு அருகில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கு முன்வரிசையில் இருக்கை ஒதுக்கித் தருமாறு அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் கட்சியின் சட்டமன்றத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களுக்கு இருக்கை ஒதுக்கித்தரும் பிரச்சினை குறித்து, இந்த அவையிலே தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் அது சபாநாயகரான தங்களின் அதிகாரத்திற்குட்பட்டது என்று பதில் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதோடு, ஏற்கெனவே இதே அவையில் அவைத் தலைவராக இருந்த திரு. தனபால் அவர்கள் என்ன தீர்ப்பு தந்தாரோ, அதையே அடிக்கடி நீங்களும் சுட்டிக்காட்டி பதில் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கையை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2024 பிப்ரவரி 13

மறுபரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்யுமாறு தங்களிடம் நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) ஆளுநர் மீது அவை உரிமைமீறல் அறிவிப்பு கொடுத்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஆளுநர் உரையின்பொழுது நான் அவை விதிமீறல் கொடுத்திருக்கிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை ஒரு நிமிடத்தில் கூறுகிறேன். நேற்றைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பேரவைக்கு வரும்பொழுது, காவல் துறை அணிவகுப்பு மரியாதையோடு பூங்கொத்து கொடுத்து, அதிகாரிகள் படைசூழ மரியாதையுடன் அழைத்துவந்து கண்ணியமாக அவரை உட்கார வைத்தீர்கள். ஆனால், மேதகு ஆளுநர் உரையாற்றும்பொழுது, ஆளுநர் உரையில் இல்லாதவற்றைத் தமிழில் பேசியும், பிறகு தேசியகீதத்திற்கு முன்பு அவர் அவையிலிருந்து வெளியேறியதையும் அவை அறியும். ஆனால், நீங்கள் கண்ணியத்தோடு பேசி, அதற்குப் பிறகு நீங்கள் பேசியதையும், அவர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட்டீர்கள். நீக்கப்பட்ட பிறகு, உடனே ஒரு மணி நேரத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய X தளத்தில் அவையில் என்ன நடந்தது என்பதை வீடியோவாக பதிவிட்டிருக்கிறார். ஆகவே, நான் சொல்வதெல்லாம், அவர் 2021, செப்டம்பர் 21–ல் பதவியேற்றதிலிருந்தே, பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆட்சிக்குத் தொடர்ந்து எதிராகவும், தமிழ்நாட்டு மக்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, X தளத்தில் பதிவிட்டிருப்பதை என்னுடைய கவனத்திற்கு உரிமை மீறலாகத் தந்திருக்கிறீர்கள். அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. உட்காருங்கள்.